## புதுக்கோட்டை நகராட்சி

### புதுக்கோட்டை நகராட்சி நகர்மன்றத்தின் தனி அலுவலர் அவர்களின் தீர்மானத்திற்கென கொண்டுவரப்பட்டள்ள அவசரக் கூட்டம் மன்றப்பொருள்கள் நாள்:16.09.2020

<table>
<tr>
<td>பொருள் எண்:1</td>
<td>புதுக்கோட்டை நகராட்சிக்கு ஐ.யு.டி.எம். திட்டம் 2020-2021ம் ஆண்டிற்கு கீழ்கண்ட சாலைப்பணிகள் செய்ய அரசாணை (டி) எண்:303 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்:9.9.2020இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><td>வ. எண்</td><td>வேலையின் பெயர்</td><td>மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில்)</td><td>TUFIDCO IUDM GRANT 2020-2021 (ரூ. லட்சத்தில்)</td><td>நகராட்சி பங்குத் தொகை (ரூ. லட்சத்தில்)</td></tr>
<tr><td>1</td><td>புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்:1,2,3இல் சாத்தப்பா நகர், சீனிவாசா நகர், கண்ணன் நகர், தில்லை நகர், ராம்நகர் 1, 2, 3 மற்றும் 8ம் வீதி, ராம் நகர் பிரதான சாலை (சிவானந்தபுரம் 1ம் வீதி முடிவிலிருந்து ராம்நகர், வெங்கிடாசலம் நகர் மற்றும் தைலாநகர், ராஜிவ்காந்தி நகர், சமத்துவபுரம் உள்சாலை, இறைவன்நகர், ஆகிய சாலைகளில் தார் தளம் அமைத்தல்</td><td>200.00</td><td>160.00</td><td>40.00</td></tr>
<tr><td>2</td><td>புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்: 31, 32, 17, 38, 41, 42 காந்திநகர் மற்றும் போஸ்நகர், நியூகோல்டன் நகர்,</td><td>200.00</td><td>160.00</td><td>40.00</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்:327<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | கே.எல்.கே.எஸ். நகர், தமிழ்நகர் சாலை, சக்தி நகர், நியூ டைமண்ட் நகர், கலைஞர்நகர், அசோக் நகர், குறிஞ்சிநகர், ஆகிய சாலைகளில் தார் தளம் அமைத்தல் | | | | |
| | 3 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்: 41, 39, 25, 24 நியூ கோல்டன் நகர் விரிவாக்கம், சுப்பிரமணியன்நகர், அழகர் நகர், செல்லையா நகர், முத்து நகர், மறைமலைநகர், ராஜகோபாலபுரம் பாறைப்பட்டி, திருவப்பூர் அம்மன் நகர், சின்னப்பா நகர் ஆகிய சாலைகளில் தார் தளம் அமைத்தல். | 200.00 | 160.00 | 40.00 | |
| | 4 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்: 1, 2, 3, 12, 10 டிரைவர் காலனி, பெக்சல் நகர், இந்திரா நகர், நேரு நகர், காமதேனுநகர், தைலாநகர் ரோடு ஸ்கூல் முதல் சமத்துவபுரம் ரோடு வரை, நாய்ப்பள்ளம் ரோடு, மாப்பிள்ளையார் குளம் ரோடு, சிவானந்தபுரம் குறுக்கு தெரு, சார்லஸ் நகர், சுப்பிரமணியன் நகர், தைலா நகர் (ஜீனியஸ் ஸ்கூல் அருகில்), என்.ஜி.ஜி.ஓ காலனி, சாலை ஆகிய | 200.00 | 160.00 | 40.00 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | சாலைகளில் தார் தளம் அமைத்தல் | | | |
| 5 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்: 41இல் இ.பி. காலனி, பொன்நகர், குமரன் நகர், பாலாஜி நகர், வள்ளியப்பா நகர், பொன்னநகர் முதல் மேட்டுப்பட்டி இணைப்பு சாலை வரை, டைமண்ட் நகர், சேங்கைகொல்லை சாலை ஆகிய சாலைகளில் தார் தளம் அமைத்தல். | 200.00 | 160.00 | 40.00 |
| | மொத்த மதிப்பீடு | 1000.00 இலட்சம் | | |

TUFIDCO Loan Grant 80% (2020-2021) Rs.800.00 Lakhs
நகராட்சி பங்கு தொகை 20% Rs.200.00 Lakhs

மேற்கண்ட பணிகள் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: (அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ) ஐ.யு.டி.எம். 2020-2021 சாலைப்பணிகள் அமைக்க மதிப்பீடு ரூ.1000.00 இலட்சத்தில் மானியம் ரூ.800.00 இலட்சம் போக மீதம் உள்ள தொகை ரூ.200.00 இலட்சம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (இ1/5006/2020).

ஒம்/ A. ஜஹாங்கீர் பாஷா, B.A.,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
புதுக்கோட்டை நகராட்சி.

## புதுக்கோட்டை நகராட்சி

### புதுக்கோட்டை நகராட்சி நகர்மன்றத்தின் தனி அலுவலர் அவர்களின் தீர்மானத்திற்கென கொண்டுவரப்பட்டள்ள சாதாரண கூட்டம் மன்றப்பொருள்கள் நாள்:28.09.2020

| | | |
|---|---|---|
| பொருள் எண்:1 | இந்நகராட்சி IHSDP திட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கிழல் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் W.P.596/2020, 438/2020 நாள்:7.2.2020ன்படி தீர்ப்புரையில் வழக்கு முடித்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கான வழக்கு கட்டணம் ரூ.7500/- வழங்க கோரி திரு.பி. மகேந்திரன், நகராட்சி வழக்கறிஞரிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி வழக்கு கட்டணமாக ரூ.7500/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக் குறிப்பு: (1) அனுமதிக்கலாம்.<br><br>(ஆ) மேற்படி வழக்கு கட்டணம் பொது நிதியிலிருந்து வழங்கலாம்.<br>(இ1/4625/2020) | தீர்மான எண்:328<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:2 | புதுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 42 வார்டுகளிலும் தினசரி உருவாகும் குப்பைகள் முறையே மக்கும் குப்பை மற்றும் மறு சுழற்சி கழிவுகளாக பிரிக்கப்பட்டு மக்கும் குப்பைகள் நகரின் 4 இடங்களில் 1. சண்முகா நகர் (4MT) 2) போஸ்நகர் (3MT) 3. சந்தைப்பேட்டை (4MT ) 4) சமத்துவபுரம் (3MT ) கட்டப்பட்டுள்ள நுண் உரமாக்கும் மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உரமாக மாற்றம் செய்யப்பட்டு உரமாக மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நுண் உரமாக்கும் மையத்திற்கு எவ்வளவு குப்பைகள் கொண்டு வரப்பட்டு மக்கவைக்கப்படுகிறது என்பதை கணக்கீடு செய்ய சுமார் 1000 கிலோ அளவுள்ள டிஜிட்டல் எடைபோடும் இயந்திரம் 4 நுண் உரமாக்கும் மையத்திற்கும் 4 எண்ணிக்கை தேவைப்படுகிறது. அவசர அவசியங்கருதி கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினத்திற்கு ரூ.1,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:**<br><br>1) தினசரி உருவாகும் குப்பைகளை நுண் உரமாக்கும் பணி மேற்கொண்டு | தீர்மான எண்:329<br>மன்றம் பதிவு செய்யலாம். |

| | | |
|---|---|---|
| | வருவதால் அவசர அவசியங்கருதி மன்ற முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள "Parisith Traders, Keela Vevachanam, Trichirappalli"என்ற நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்கவும், மேற்கண்ட செலவினங்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் பதிவு செய்யலாம்.<br>2) மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிடலாம். (ந.க.எண்:எச்1/6085/2020 நாள்:3.9.2020). | |
| பொருள் எண்:3 | புதுக்கோட்டை நகராட்சியில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 16719க்கு "புரட்சித்தலைவி அம்மா அவர்களின் விரிவான விபத்து காப்பீடு திட்டம் குறித்த பயனாளிகளுக்கு புள்ளி விபரம் சேகரிப்பதற்கு கணக்கெடுப்பாளர்கள் மேற்பார்வையாளர்கள், சமுதாய அமைப்பாளரை கொண்டு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்:12635/2020/ UPA 3-1 நாள்:28.08.2020இல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி 16719 படிவங்கள் 1 முதல் 42 வார்டுவரை கணினியில் பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுக்கவும், வார்டு வாரியாக மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் 5 நபர்களை வைத்து கணக்கெடுக்கவும், கணக்கெடுக்கப்பட்ட படிவங்களை கணினியில் பதிவிறக்கம் செய்வதற்கும் ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:**<br><br>மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:1280/எப்3/2019). | தீர்மான எண்:330<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண் 4 | இந்நகராட்சியில் 2019-2020ம் ஆண்டு IUDM நிதியின் கீழ் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 02.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தொழில்நுட்ப நமுனா கூர்ந்து ஆய்வு செய்து கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. | தீர்மான எண்:331<br>அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண்: | பணிகளின் விபரம் | மதிப்பீடு ரூபாய் | ஒப்பந்தக்காரர் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|---|

| | | லட்சத்தில் | | (ரூபாயில்) | |
|---|---|---|---|---|---|
| 1 | Construction of 5.00 Lakh litres capacity over Head Tank at KLKS Nagar and Laying of pumping line and distribution line at Ward No.41 | 180.00 | Thiru.P.Karuppiah Contractor Pudukkottai | 16493512.00 | மதிப்பீட்டை விட 4.99% அதிகம் |
| | | | Thiru. P. Chinnappan Contractor Pudukkottai. | 17207720.00 | மதிப்பீட்டை விட 9.53% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டைவிட அதிகமாக இருந்தாலும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலைவிகிதம் 2019-2020 என்பதால் தற்பொழுது 2020-2021ம் ஆண்டு விலைவிகிதம் வைத்தால் மதிப்பீட்டை காட்டிலும் 10% அதிகமாக ஏற்படும். எனவே மேற்படி பணியை உரிய காலத்தில் முடிக்க வேண்டியுள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் காலதாமத்தை தவிர்க்கும்பொருட்டும் மேற்படி கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி நகர்மன்றத்தின் அதிகாரவரம்பான 5 சதவிகிதத்திற்குள் வருவதால் மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியை IUDM திட்ட நிதியிலிருந்து செலவழிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:10675/2019/இ1)

| | | |
|---|---|---|
| பொருள் எண்:5 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 42 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் வராமல் தடுக்க நகர் முழுவதிலும் உள்ள 36030 வீடுகளையும் லார்வா புழுக்கள் உருவாவதை கண்காணித்து அகற்ற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆணைக்கு இணங்க (P-300) அதாவது ஒரு டெங்கு தடுப்பு (DBC) பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு 50 வீடுகள் என வாரம் 300 வீடுகள் வீதம் 120 டெங்கு தடுப்பு பணியாளர்கள் ஒப்பந்த முறையில் டெங்கு தடுப்பு பணி மேற்கொள்ள | தீர்மான எண்:332 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
ஒரு நபருக்கு ஒருநாள் ஊதியம் ரூ.241/- வீதம், மாவட்ட ஆட்சியர் விலை விகிதத்தில் கீழ்க்காணும் விவரப்படி கணக்கிடப்பட்டுள்ளது.
<table>
<tr><td>Salary 120x241x347</td><td>9167640/-</td></tr>
<tr><td>ESI @ 4.5%</td><td>412543/-</td></tr>
<tr><td>EPF @ 13.16%</td><td>1206461/-</td></tr>
<tr><td>Life Insurance @ 0.83%</td><td>76091/-</td></tr>
<tr><td>Safety Equipments 120x950</td><td>114000/-</td></tr>
<tr><td>Administrative Charges @5%</td><td>548836/-</td></tr>
<tr><td>Total amount Rs.</td><td>11525571/-</td></tr>
</table>
ஒரு வருட மொத்த செலவினம் ரூ.1,15,25,571/-த்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு:<br><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி பணிக்கு 2020-2021க்கான பொது நிதிய்ன கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (10212/2019/எச்1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்:6</td>
<td>
இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்: 13, காமராஜபுரம் 33ஆம் வீதியில் உள்ள மினி போர் போரில் உள்ள மின்மோட்டார், டேங் மற்றும் Main Box பழுதாகிவிட்டது. மேற்படி பணி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.66,000/-க்கும், மேலும் இப்பணியினை நகராட்சி அவசர சட்டம் 15ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு:<br><br>
அ) பதிவு செய்யலாம்<br>
ஆ) மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்:6008/2020/இ1)
</td>
<td>தீர்மான எண்:333 மன்றம் பதிவு செய்யப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்:7 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்: 13, காமராஜபுரம் 34ஆம் வீதியில் மேற்கு பகுதியில் உள்ள மினி போர் பழுதாகிவிட்டது. இப்பணி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால், அதற்கான தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.42,500/-க்கும், மேலும் இப்பணியினை நகராட்சி அவசர சட்டம் 15ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:**<br><br>அ) பதிவு செய்யலாம்<br>ஆ) மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:6008/2020/இ1) | தீர்மான எண்:334<br>மன்றம் பதிவு செய்யப்பட்டது. |
| பொருள் எண் 8 | புதுக்கோட்டை நகராட்சி தெற்கு கிராமம் புல எண்: 289/13இல் உள்ள இடத்தில், நகராட்சி அனுமதி பெறாமலும், சாலைக்கு இடம் ஒதுக்காமலும் திரு.ஆர்.செல்லையா என்பவர் நகராட்சி அனுமதியின்றி குடியிருப்பு வீடு கட்டிடம் கட்டப்பட்டு வருவதாகவும் அதனை நிறுத்துமாறும் தெரிவித்து மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்:36/2020இல் நகராட்சி ஆணையரை 2ம் பிரதிவாதியாக சேர்த்து திரு.ச. பழனிச்சாமி மற்றும் இருவரால் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கை நடத்துமாறு நகர்மன்ற வழக்கறிஞர் திரு.ஆர் வெங்கடேசன் என்பவரை கேட்டுக்கொள்ளலாம். மேலும் மேற்படி வழக்கிற்கு ஆகும் மொத்த செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்:5682/எப்1/2020)<br>2. மேற்படி செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | தீர்மான எண்:335<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:9 | இந்நகராட்சி வார்டு எண்:42க்குட்பட்ட லெட்சுமிநகர் பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை செலுத்தக்கோரி மின் வாரியத்திலிருந்து கீழ் கண்டுள்ளவாறு கேட்பு வரப்பெற்றுள்ளது. | தீர்மான எண்:336<br>மன்றம் பதிவு செய்யப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 1. லெட்சுமிநகர் SC No. 2125 ரூ.33,229.00<br>2. லெட்சுமிநகர் SC No. 277 ரூ. 1,889.00<br><br>மேற்கண்டவாறு கேட்புத்தொகை ரூ.33,229/- மற்றும் ரூ.1889/- மின் வாரியத்திற்கு செலுத்தவும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி தொகையினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் செலவு மேற்கொள்வதையும், மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br><br>அ) மன்றம் பதிவு செய்யலாம்.<br>ஆ) மேற்படி செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டதையும்<br>மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்:5521/2017/இ1) | |
| பொருள் எண்:10 | இந்நகராட்சி 2019-2020ம் ஆண்டு IUDM திட்டத்தின் கீழ் ரூ.180.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்: 41 கே.எல்.கே.எஸ். நகரில் 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் பிரதான குழாய் 1.98 சி.மீ அமைக்கும் பணிக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் பத்திரிக்கையில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.70,875/- வழங்க கோரி EYedea brand solutions நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற தொகை ரூ.70875/- வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கும் அனுமதிக்கும். (ந.க.எண்:10675/2019/இ1)<br><br>**அலுவலகக் குறிப்பு:**<br><br>1) அனுமதிக்கலாம்.<br>2) மேற்காணும் தொகை பொதுநிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:337<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:11 | புதுக்கோட்டை நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் கீழ்கண்ட வாகனங்களுக்கு காப்பீட்டு காலம் முடிவடைவதால் காப்பீட்டு தொகை | தீர்மான எண்:338<br>மன்றம் பதிவு |

<table>
<tr>
<td></td>
<td>கீழ்கண்டவாறு செலுத்த வேண்டியுள்ளது.<br><br>வ.எண் வாகனம் காப்பீட்டுத் தொகை<br><br>2. TN 55 Q 9050 Rs.31,295/-<br>3. TN 55 S 9236 Rs.31,244/-<br><br>Total Rs.62539/-<br><br>மேற்கண்ட தொகையை ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: 1 மன்றம் அனுமதிக்கலாம். செலவினத்தை பொதுநிதியிலிருந்து செலவிடலாம்.<br>2 பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்:61/2020/எச்1).</td>
<td>செய்யப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td></td>
<td></td>
</tr>
</table>

ஒம்/ A. ஜஹாங்கீர் பாஷா, B.A.,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
புதுக்கோட்டை நகராட்சி.